**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF MAHILA COURT / ADDITIONAL SPECIAL COURT FOR EXCLUSIVE TRIAL OF CASES UNDER POCSO ACT,COIMBATORE.

S.C.No.86 of 2021

Prosecution witness – 4

| | | | |
|---|---|---|---|
| Name of Witness | PW-4 ராமையா | Caste | |
| Father / Husband Name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.03.2023

(எதிரி ஆஜர்.)

**முதல் விசாரணை-**

நான் கோயமுத்தூர், இரத்தினபுரி, கண்ணப்பா நகர், கதவுஎண் 13, எஸ்.பி.நகரில் குடியிருந்து வருகிறேன். நான் தச்சு ஆசாரியாக கண்ணன் டிபார்ட்மெண்டில் மரவேலை பார்த்து வருகிறேன். கடந்த 12.12.2018 அன்று மதியம் சாப்பாட்டுக்கு சுமார் 2.30 – 3.00 மணிக்கு கண்ணப்ப நகரில் உள்ள என் வீட்டிற்கு ரயில்வே கேட் வழியாக போனேன். அப்போது ரயில்வே கேட்டிற்கு 100 மீ தள்ளி கூட்டமாக இருந்தது. போலீசாரும் அங்கு இருந்தார்கள். போலீஸ் நான் போய் பார்க்கும்போது வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள். ஒரு அம்மா அடிபட்டு கிடந்தார்கள், 1 1/2 வயதில் ஒரு குழந்தை அடிபட்டிருந்தது, ஒரு குழந்தை தொப்புள்கொடியோடு ரயில்வே தண்டவாளத்தில் கிடந்தது. வரைபடம் வரைந்ததற்கு போலீசார் என்னிடம் ஒரு கையொப்பம் கேட்டார்கள். நானும், கண்ணப்ப நகரை சேர்ந்தகாட்டுராஜாவும் கையொப்பம் போட்டோம். காட்டுராஜாவை எனக்கு தெரியும். அந்த பார்வை மகஜரில் இரண்டாவதாக இருப்பது என்னுடைய கையொப்பம். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.2.**

**குறுக்கு விசாரணை -**

நான் 3 ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். போலீசார் சொல்லித்தான் சம்பவம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் கூட்டமாக இருந்தது, சாப்பிட போகும்போது அந்த கூட்டத்தை போய் பார்த்தேன். சம்பவ இடத்திற்கும், நான் குடியிருக்கும் கண்ணப்பா நகருக்கும் 5 நிமிடத்தில் நடந்து செல்லலாம். போலீஸ் விசாரணையில் கண்ணன் டிபார்ட்மெண்டில் நான் வேலை செய்யும் விபரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.2 காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. பார்வை மகஜரில் என்ன எழுதியிருந்தது என்றால் ஒரு அம்மா ரயிலில் அடிபட்டு விட்டார்கள், 1 1/2 வயது பையன் அடிபட்டுவிட்டான், தொப்புள்கொடியோடு ஒரு குழந்தை கிடந்தது என்று எழுதி படமும் போட்டிருந்தார்கள். நான் போகும்போதுதான் அவர்கள் எழுதிக்கொண்டிருந்தார்கள். சம்பவ இடத்தில் ஹேண்ட் பேக் கிடந்ததாக சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. நான் சம்பவ இடத்திற்கு போனபோது இறந்த பெண்ணின் பெற்றோர்கள் வந்திருந்தார்களா என்றால் ஒரு ஐயாவும், அம்மாவும் வந்திருந்தார்கள். சம்பவம் நடந்த இடம் என்பது சிவானந்தா காலனியிலிருந்து கண்ணப்பா நகர் செல்வதற்கு கடந்து போகக்கூடிய ஒரு குறுக்கு வழி என்றால் சரிதான். பொதுமக்கள் அந்த வழியாக ரயில்வே தண்டவாளத்தை கடந்து செல்வது வழக்கம் என்றால் சரிதான். அந்த தண்டவாளப்பாதை வளைவான பாதை என்றால் சரிதான். அடிக்கடி ரயில் விபத்து ஏற்படுவது வழக்கம் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தை பார்க்கும்போது சடலங்கள் இருந்தது. அந்த சடலங்களை நான் போட்டோ எடுக்கவில்லை, போலீசார் எடுத்தார்கள். எத்தனை போட்டோ எடுத்தார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. நான் சம்பவ இடமே செல்லவில்லை என்றும், அ.சா.ஆ.2 காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2023 ம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ம் நாளன்று, 1969-ஆம் ஆண்டு உறுதிமொழி சட்டம் (மையச்சட்டம் 44/1969)-இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

சாட்சியின் கையொப்பம்

"என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

அமர்வு நீதிபதி,
மகிளா கோர்ட் / கூடுதல் சிறப்பு நீதிமன்றம்
(பாலியல் வன்முறையிலிருந்து குழந்தைகளை
பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் விசாரிக்கும்
சிறப்பு நீதிமன்றம்), கோயமுத்தூர்.

27/03/2023